மாண்பமை கள்ளக்குறிச்சி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,
சமூகம்

சி.எம்.பி.எண். 5780 /2017

in

R.C.S.No.225 / 2017

A.முருகன், (50),
த/பெ. அங்கமுத்து,
செயலாளர் - யாதவ முன்னேற்றச் சங்கம்,
உலகப்ப செட்டி கொல்லை தெரு,
கள்ளக்குறிச்சி - 606 202.

... மனுதாரர் / Defacto Complainant

-எதிர்-

1. S.இருதயராஜ்,
காவல் உதவி ஆய்வாளர்,
கள்ளக்குறிச்சி காவல் நிலையம்,
கள்ளக்குறிச்சி - 606 202.

... எதிர்மனுதாரர் / விசாரணை
அலுவலர் / Dejure Complainant

2. சின்னசாமி,
த/பெ. மொட்டைய படையாச்சி,
அரசு மருத்துவமனை பின்புறம்,
சந்திரலேகா நகர்,
கள்ளக்குறிச்சி மற்றும் பெயர் தெரியாத,
அடையாளம் தெரிந்த 12 நபர்கள்.

... எதிர்மனுதாரர்கள் / எதிரிகள்

**PROTEST PETITION FILED BY THE PETITIONER / DEFACTO COMPLAINANT AGAINST THE FINAL REPORT FILED BY THE 1ST RESPONDENT / INVESTIGATION OFFICER**

1) கள்ளக்குறிச்சி உலகப்ப செட்டி கொல்லை தெருவில் உள்ள ஸ்ரீ நவநீத கிருஷ்ணர் மற்றும் குருமிச்சி அம்மன் கோவில் பல ஆண்டுகளாக யாதவ சமூகத்தினரால் பராமரிக்கப்பட்டு தொடர்ந்து வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது. மனுதாரர் யாதவ முன்னேற்ற சங்கத்தின் செயலாளராக உள்ளார். கள்ளக்குறிச்சி பழனிவேல்

மருத்துவமனை அருகே சுமார் 500 சதரடி கொண்ட அரசுக்கு சொந்தமான இடத்தை மொட்டைய படையாச்சி குமாரர் இரண்டாம் எதிர்மனுதாரர் சின்னசாமி என்பவர் ஆக்கிரமித்துக் கொண்டு, அந்த ஆக்கிரமிப்பு இடத்து அனுபவத்தை யாரும் தடை செய்யக் கூடாது எனக் கோரி மனுதாரர் சங்கத்திற்கு எதிராக கள்ளக்குறிச்சி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.120/2015 என்பதால் வழக்கு தொடர்ந்து அது நிலுவையில் உள்ளது.

2) உண்மையில், மேற்படி 500 சதுரடி இடம் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமானதாகும். கடந்த 23.03.2016 அன்று இரவு சுமார் 8.00 மணியளவில் மனுதாரரும், அவரது சங்க உறுப்பினர்கள் சிலரும் கோயில் மேம்பாடு பற்றி மேற்படி நவநீதகிருஷ்ணர் கோவிலில் ஆலோசனை செய்து கொண்டிருந்தனர். அப்போது மேற்படி இரண்டாம் எதிர்மனுதாரர் சின்னசாமி, அவரது மனைவி, மகன் மற்றும் அடையாளம் தெரியாத அடியாட்கள் சுமார் 10 பேர் மனுதாரர் சங்கத்திற்கு சொந்தமான கோயிலுக்குள் அத்துமீறி நுழைந்து "டேய் தேவடியா பசங்களா; உங்களால தாண்டா நாங்க கோர்ட்டுக்கு போய் உங்கமேலே கேசு போட வேண்டியதா போயிடுச்சி; நகராட்சி இடத்தை உங்க தலையீடு காரணமா நாங்க அனுபவிக்க முடியாம இருக்கோம். இனிமே எங்க விஷயத்திலே நீங்க தலையிட்டா ஒருத்தனும் உயிரோடு இருக்க முடியாது; உங்க அத்தனை பேரையும் வெட்டி புதைத்சுடுவோம்; கோயிலே கொளுத்திடுவோம்" என மனுதாரரையும் அவரது சங்க ஆட்களையும் பார்த்து ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தார். மேலும், மனுதாரர் சங்கத்தினர் மேல் பொய் புகார் கொடுத்து உள்ளே தள்ளி

விடுவதாக மிரட்டினர். இதனால் மனுதாரரும் அவரது சங்க ஆட்களும் அனைவரும் உயிருக்கு பயந்து அங்கிருந்து கிளம்பி சென்று விட்டனர்.

3) இது சம்மந்தமாக மனுதாரர் கடந்த 24.03.2016 தேதியில் பதிவு அஞ்சல் மூலம் கள்ளக்குறிச்சி காவல் நிலைய ஆய்வாளருக்கு குற்றப்புகார் ஒன்றினை அனுப்பி இருந்தார். மனுதாரருடைய குற்றப்புகார் கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் 26.03.2016 அன்று பெறப்பட்டுள்ளது. மனுதாரருடைய குற்றப்புகார் கைது செய்தற்குரிய குற்றமாகும் (Cognizable Offence).

4) உச்சநீதிமன்றம் W.P. (Crl.) No.68/2008 என்ற வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது சம்மந்தமாக காவல் துறையினருக்கு வழங்கிய அறிவுறுத்தல்களின் படி கள்ளக்குறிசசி காவல் நிலைய ஆய்வாளர் செயல்பட்டு மனுதாரருடைய 24.03.2016 தேதியிட்ட குற்றப்புகாரின் அடிப்படையில் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே குற்ற விசாரணை முறை பிரிவு 154(3)ன் கீழ் மனுதாரர் தன்னுடைய குற்றப்புகாரின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கக் கோரி கடந்த 12.05.2016 தேதியில் விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு பதிவு அஞ்சல் மூலம் மனு அனுப்பினார். அதன் பிறகும் மனுதாரருடைய 24.03.2016 தேதியிட்ட குற்றப்புகார் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

5) எனவே, மனுதாரர் தன்னுடைய 24.03.2016 தேதியிட்ட குற்றப்புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து

மேல் நடவடிக்கை எடுக்க கள்ளக்குறிச்சி காவல் ஆய்வாளருக்கு உத்தரவிடக்கோரி கு.வி.மு.ச. பிரிவு 156(3)ன் கீழ் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த தனிப்புகாரின் அடிப்படையில் எதிரிகள் மீது 147, 447, 294(b), 506(i) IPC-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.523/2016 என்பதாக முதல் எதிர்மனுதாரர் / விசாரணை அலுவலரால் கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் கடந்த 20.09.2016 தேதியில் பதிவு செய்யப்பட்டது.

6) மேற்படி மனுதாரர் குற்ற வழக்கில் (குற்ற எண்.523/2016) புலன் விசாரணை மேற்கொண்ட கள்ளக்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளர் / விசாரணை அலுவலர் திரு.இருதயராஜ் அவர்கள் கடந்த 26.12.2016 தேதியில் மனுதாரர் குற்ற வழக்கை பிழை வழக்கு (Mistake of Fact) என முடிவு செய்து இறுதி அறிக்கை தயார் செய்துள்ளார். இந்த விவரம் தகவல் பெறும் உரிமைச் சட்டம் வயிலாக மனுதாரருக்கு தெரிய வந்தது. மேற்படி மனுதாரர் வழக்கில் விசாரணை அலுவலர் கள்ளக்குறிச்சி காவல் நிலைய குற்ற எண்.523/2016 என்பதில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளதுபோல் எந்தவித சம்பவமும் நடக்கவில்லை என மனுதாரர் கூறியதாக பொய்யான 161 Cr.P.C. வாக்குமூலம் தயாரித்துள்ளார். அதே போன்று மனுதாரர் சங்கத்தைச் சார்ந்த மற்ற சாட்சிகளும் முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது போல் எந்தவித சம்பவமும் நடக்கவில்லை என வாக்குமூலம் அளித்ததாக பொய்யான 161 Cr.P.C. வாக்குமூலத்தை முதல் எதிர்மனுதாரர் / விசாரணை அலுவலர் தயாரித்துள்ளார்.

இரண்டாம் எதிர்மனுதாரர் மற்றும் அவரைச் சார்ந்த மற்ற எதிரிகளையும் தண்டனையிலிருந்து காப்பாற்றும் பொருட்டு மனுதாரருடைய குற்ற வழக்கின் விசாரணை அலுவலர் பொய்யான இறுதி அறிக்கையை சமூகம் நீதிமன்றத்தில் கடந்த 11.07.2017 தேதியில் தாக்கல் செய்துள்ளார். முதல் எதிர்மனுதாரர் / விசாரணை அலுவலர் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கை பொய்யானது மட்டுமல்லாமல் சட்டத்திற்கு புறம்பானதாகும். விசாரணை அலுவலர் தாக்கல் செய்துள்ள இந்த இறுதியறிக்கையை மனுதாரர் வலுவாக ஆட்சேபிக்கிறார். இந்த இறுதி அறிக்கையை சமூகம் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக்கூடாது என மனுதாரர் பிரார்த்திக்கிறார். மனுதாரருடைய குற்ற வழக்கை நிரூபிக்கும் வகையில் மனுதாரரிடம் போதிய சாட்சிகள் உள்ளனர்.

<u>இறுதி அறிக்கை ஆட்சேபனைக்கான காரணங்கள் :</u>

1) இறுதி அறிக்கை கடந்த 26.12.2016 தேதியில் தயார் செய்யப்பட்டுள்ளது. ஆனால் 6 மாத காலம் கடந்த பிறகு மனுதாரர் சமூகம் நீதிமன்றத்திற்கு புகார் அளித்த பிறகே இறுதி அறிக்கை சமூகம் நீதிமன்றத்தில் விசாரணை அலுவலரால் கடந்த 11.07.2017 தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. கு.வி.மு.ச. பிரிவு 173(2) படி இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்ட உடனேயே சமூகம் நீதிமன்றத்தில் விசாரணை அலுவலரால் தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2) மனுதாரரிடமும் அவரது சங்கத்தை சார்ந்த நபர்களிடமும் நேரடி விசாரணை செய்யாமல் அவர்கள் தந்ததாக

பொய்யான 161 Cr.P.C. வாக்குமூலங்கள் விசாரணை அலுவலரால் தயாரிக்கப்பட்டுள்ளது.

3) சமூகம் நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கில் மனுதாரரே எவ்வாறு முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்று வாக்குமூலம் கொடுப்பார் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

4) மனுதாரருடைய குற்ற வழக்கு பிழை வழக்கு என முடிக்கப்பட்டது பற்றிய அறிவிப்பு கு.வி.மு.ச. பிரிவு 157(2) மற்றும் தமிழ்நாடு காவல் நிலை ஆணை (P.S.O.) 660 படி விசாரணை அலுவலரால் மனுதாரருக்கு அளிக்கப்படவில்லை.

5) தமிழ்நாடு காவல் நிலை ஆணை (P.S.O) 662 படி பொய் புகார் கொடுத்தமைக்காக மனுதாரர் மீது இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 182 மற்றும் 211ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மேல் நடவடிக்கை எடுக்க விரும்புகிறாரா? இல்லையா? என்பதற்காக காரணங்களை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில் விசாரணை அலுவலர் தெரிவிக்கவில்லை.

6) போதிய சாட்சிகள் இருந்தும், சமூகம் நீதிமன்ற உத்தரவுப்படி மனுதாரரிடமும் அவரது சங்க ஆட்களிடமும் விசாரணை அலுவலர் விசாரணை செய்து வாக்குமூலம் பெறவில்லை.

மனுதாரருடைய குற்ற வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, இறுதி அறிக்கை மற்றும் இத்துடன் தாக்கல்

செய்துள்ள ஆவணங்களை இந்த எதிர்ப்பு மனுவின் (Protest Petition) ஒரு அங்கமாக பாவிக்க மனுதாரர் பிரார்த்திக்கிறார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த எதிர்ப்பு மனுவை தனிப்புகார் தாவாவாக பாவிக்க சமூகம் நீதிமன்றத்தை மனுதாரர் பிரார்த்திக்கிறார். சென்னை உயர்நீதிமன்றம் Crl.R.C.588/2016 என்ற வழக்கில் அளித்துள்ள தீர்ப்பில் "குற்ற வழக்கு பிழை வழக்கு என முடிக்கப்பெற்று தாக்கல் செய்யப்படும் இறுதி அறிக்கையை எதிர்த்து மனுதாரர் தாக்கல் செய்யும் எதிர்ப்பு மனுவை தனிப்புகார் தாவாவாக கருதி கு.வி.மு.ச. பிரிவுகள் 200, 202, 190(1) (a), 204, 203 என்பதன் கீழ் சம்மந்தப்பட்ட நீதித்துறை நடுவர் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" அறிவுறுத்தியுள்ளது.

காவல் துறை மற்றும் காவல் துறை அல்லாத மற்ற அரசு அதிகாரிகள் மீது தனிப்புகார் தாவா (Private Complaint) தாக்கல் செய்யப்பட்டால் அதனை விசாரிக்கும் அதிகாரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு (Judicial Magistrate Court) உள்ளது என சென்னை உயர்நீதிமன்றம் 2012 (3) CTC 379 என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும் உச்சநீதிமன்றம் மோசடியான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டால் அதனை தாக்கல் செய்தவர் மீது கு.வி.மு.ச. பிரிவு 340 படி நீதி நிர்வாகத்தை பாதித்த காரணத்திற்காக (Affecting Administration of Justice) சம்மந்தப்பட்ட நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என 1998 (2) SCC 493 என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கியுள்ளது.

எனவே சமூகம் நீதிமன்றத்தார் அவர்கள் தயவு செய்து

(அ) மனுதாரருடைய குற்ற வழக்கில் விசாரணை அலுவலர் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையை நிராகரிக்குமாறும்,

(ஆ) மனுதாரருடைய இந்த எதிர்ப்பு மனுவை தனிப்புகார் தாவாவாக கருதி மனுதாரரையும் அவரது சாட்சிகளையும் மெய்யுறுதியின் பேரில் விசாரணை செய்யுமாறும்,

(இ) மோசடியான இறுதியறிக்கையை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முதல் எதிர்மனுதாரர் / விசாரணை அலுவலர் மீது கு.வி.மு.ச. பிரிவு 340 படி நடவடிக்கை எடுக்குமாறும்,

(ஈ) முதல் எதிர்மனுதாரருக்கும், எதிரிகளுக்கும் அழைப்பாணை அனுப்பி சமூகம் நீதிமன்ற கோப்பிற்கெடுத்து விசாரணை செய்து குற்ற எண்.523/2016 என்பதில் எதிரிகள் செய்த குற்றத்திற்காக தண்டிக்குமாறும்,

(உ) முதல் எதிர்மனுதாரர் / விசாரணை அலுவலரிடமிருந்து நியாயமான இழப்பீடு தொகையை பெற்று மனுதாரருக்கு வழங்குமாறும்,

(ஊ) மனுதாரருடைய குற்ற வழக்கில் மேற்கொண்டு புலனாய்வுக்கு உத்தரவிடுமாறும்,

(எ) மேலும், சமூகம் நீதிமன்றம் நியாயமெனக் கருதும் இன்னபிற பரிகாரங்களை வழங்கி உத்தரவிடுமாறும் மனுதாரர் சமூகம் நீதிமன்றத்தாரை பிரார்த்திக்கிறார்.

மனுதாரர் வழக்கறிஞர்

மனுதாரர்

## சான்றாளர்கள் பட்டியல் (List of Witnesses)

1. A.முருகன், த/பெ.அங்கமுத்து,
   செயலாளர், யாதவ முன்னேற்றச் சங்கம்,
   உலகப்ப செட்டி கொல்லை தெரு,
   கள்ளக்குறிச்சி - 606 202.

2. G.ராஜி, த/பெ. குருசாமி,
   87/7, இராமசாமி நகர்,
   கள்ளக்குறிச்சி - 606 202.

3. A.பழனிமுத்து,
   த/பெ.குப்புசாமி,
   மோரைத் தெரு,
   கள்ளக்குறிச்சி - 606 202.

## ஆவணங்களின் பட்டியல்

1. குற்ற எண்.523/2016 முதல் தகவல் அறிக்கை நகல் (Under RTI Act).
2. குற்ற எண்.523/2016 இறுதி அறிக்கை நகல் (Under RTI Act).
3. விழுப்புரம் தலைமை நீதித்துறை நடுவரின் பதில் நகல். (Under RTI Act).

நாள் : 27.07.2017 மனுதாரர்

மாண்பமை கள்ளக்குறிச்சி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சமூகம்

சி.எம்.பி.எண். 5780 /2017

in

R.C.S.No.225 / 2017

A.முருகன்,

... மனுதாரர் / Defacto Complainant

-எதிர்-

S.இருதுராஜ்,

... எதிர்மனுதாரர் / விசாரணை அலுவலர் / Dejure Complainant

சின்னசாமி, மற்றும்

12 நபர்கள் ... எதிர்மனுதாரர்கள் / எதிரிகள்

**PROTEST PETITION FILED BY THE PETITIONER / DEFACTO COMPLAINANT AGAINST THE FINAL REPORT FILED BY THE 1ST RESPONDENT / INVESTIGATION OFFICER**

விலாசம்

**M/s. DPL SRIDHAR & B.RAMESH**
Advocates
Kallakurichi
Counsel for Petitioner